கல்வி தொலைக்காட்சி
KALVI THOLAIKAATCHI

14-07-2021

**பாடம் : கல்வி அழகே அழகு**

**இணைய பணித்தாள்**

**வகுப்பு 8**

**பெயர் :**

**பள்ளி :**

**கற்றோருக்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற**
**முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்**

**1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ?**

அ. புறநானூறு ஆ. அகநானூறு இ.நீதிநெறி விளக்கம் ஈ. தனிப்பாடல் திரட்டு

**2. இப்பாடலின் ஆசிரியர் யார்?**

அ. நப்பூதனார் ஆ. குமரகுருபரர் இ. திருவள்ளுவர் ஈ.பரஞ்சோதி

**3. இப்பாடலில் காணப்படும் எதுகை நயச் சொற்கள்--------------------**

அ. கற்றோர் – கல்வி ஆ. மற்றோர் – முழுமணி
இ. அணிகலம் – நலனே ஈ. கற்றோர் – மற்றோர்

**4. பொருள் தருக:-**

**1. கலன் -** **2. முற்ற -**

**ஆ. சரியான விடையைத் தேர்வு செய்க:-**

**5. கற்றவருக்கு அழகு தருவது எது?**

அ. தங்கம் ஆ. வெள்ளி இ. வைரம் ஈ. கல்வி

**6. கலனல்லால் – என்னும் சொல்லைப் பிரித்தால் கிடைப்பது______________**

அ. கலன் + லல்லால் ஆ. கலம் + அல்லால் இ. கலன் + னல்லால் ஈ. கலன் + அல்லால்

**7. மாறுபட்டதைக் கண்டுப்பிடி:-**

அ. கயிலைக் கலம்பகம் ஆ. கலிவெண்பா இ. திருகுறள் ஈ. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

**8. நீதிநெறி விளக்கத்தில் உள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை_______**

அ. 102 ஆ. 103 இ. 100 ஈ. 104

**9. குமரகுருபரரின் காலம்____________**

அ. 20-ம் நூற்றாண்டு ஆ. 17-ம் நூற்றாண்டு இ.18-ம் நூற்றாண்டு ஈ. 19 –ம் நூற்றாண்டு

**10. கல்வியுடன் தொடர்பில்லாத பழமொழி எது?**

அ. இளமையில் கல் ஆ. அறிவே ஆற்றல்
இ. கந்தையானாலும் கசக்கிக்கட்டு ஈ. கற்றலின் கேட்டல் நன்று

தமிழ் விதை
LIVEWORKSHEETS